# அறிவித்தல்

## தேர்தல் ஆணைக்குழு

## தேர்தல் ஆணைக்குழுவினால் 2026 ஆம் ஆண்டிற்கு அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்காக தகுதியுடைய அரசியல் கட்சிகளிடமிருந்து 2026.01.28 ஆம் திகதி தொடக்கம் 2026.02.28 ஆம் திகதி வரை விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

01. 2009ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4)(அ) பிரிவிற்கமைய, தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக கணிக்கப்படுவதற்கான விண்ணப்பங்கள் 2026.01.28 ஆம் திகதியிலிருந்து 2026.02.28 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அத்தகைய விண்ணப்பப்படிவங்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு குறித்த கட்சியின் செயலாளரினால் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படலாம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படலாம். அத்தகைய விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்கும் போது கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "அரசியல் கட்சிகளாக கணிக்கப்படுவதற்கான விண்ணப்பப்படிவம் - 2026" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய (10107) என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

02. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உரிய நேரம் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காது.

03. அரசியற் கட்சியொன்றாக கணிக்கப்படுவதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி 2472/21 இலக்க, 2026.01.21ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் தரப்பட்டுள்ள அளவுகோல்களின் படி உரிய முறையில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுடன் கட்சியின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

04. தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திலிருந்து (www.election.gov.lk) விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்யலாம். மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தும் தேர்தல்கள் செயலகத்திலிருந்தும் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. கட்சி ஏற்றுக்கொள்ளப்படுமாயின் 2471/24ஆம் இலக்க, 2026.01.13 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் தரப்பட்டுள்ள அனுமதித்த (ஆ) அட்டவணையிலுள்ள கட்சிச் சின்னங்களில் அக்கட்சிக்கு ஒதுக்கிக்கொடுக்க எதிர்பார்க்கப்படுவது எச்சின்னம் என்பதை அக்கோரிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடுதல் வேண்டும்.

06. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதனோடு பின்வரும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தேவைப்படும் பட்சத்தில், மூலப்பிரதிகள் பரிசீலிக்கப்படும்.

    6.1 கட்சி யாப்பு

    6.2 கட்சியின் உத்தியோகத்தர் சபையின் பட்டியல்

    6.3 கட்சியிலுள்ள பெண் உத்தியோகத்தர்களின் பெயர்கள் (கடந்த 04 ஆண்டுகளில்)

    6.4 கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள்
    (விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் ஆண்டுக்கு முந்திய நான்கு(4) ஆண்டு காலத்திற்குரிய)

    6.5 கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம்

    6.6 அரசியல் கட்சியொன்றாக சமீபத்திய நான்கு ஆண்டு காலத்துள் தொடர்ச்சியாக இயங்கியதை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கக்கூடிய அனைத்து

    ஆவணங்களையும் வெவ்வேறான 04 கோப்புகளில் ஆண்டுகள் வாரியாக தனிவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

07. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக கணிக்கப்படுவதற்கு முன்வைக்கும் ஒரு கோரிக்கை தொடர்பில் 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் (விசேட) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(5), (6), (7) ஆகிய பணிப்புகள் அறுதியும் இறுதியுமானவையாகும்.

08. விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் போது 2472/21ஆம் இலக்க, 2026.01.21 ஆம் திகதிய அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தல் சம்பந்தமான அதிவிசேட வர்த்தமானியில் தரப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு அமைய செயலாற்றப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்படுதல் வேண்டும்.

**ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க**
**தவிசாளர்,**
**தேர்தல் ஆணைக்குழு.**

**தேர்தல் ஆணைக்குழு,**
**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை,**
**ராஜகிரிய (10107).**

**2026 சனவரி மாதம் 28ஆம் திகதி**

**குறிப்பு :** இது சம்பந்தமாக 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பரிசீலிக்கலாம்.